www.ecourtsindia.com



Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF : SESSIONS JUDGE, MAHILA COURT, CHENGALPATTU.

Calender ..

Miscellaneous ..

Preliminary Register ..

Sessions .. SC.No. 213/2022

Prosecution .. P.W.4

Deposition of Witness for

Court

Name :.. மருத்துவர்.கணேஷ்

Father's Name :.. திரு. ராமசுப்பன் Caste :..

Village : Religion :..

Taluk : Age :..

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.02.2025.

**சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**அ.சா. 4 முதல் விசாரணை-**

**( எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.குமரகோட்டி ஆஜரில் இருந்தார். )**

நான் தற்போது வி க்யூர் மருத்துவமனையில் மெடிக்கல் டைரக்டராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த அதே மருத்துவமனையில் அதே பணியில் இருந்த போது 31.12.2010 ம் தேதி இரவு சுமார் 11.00 மணிக்கு எல்.ரேவதி வ/25 என்பவர் எங்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தார். அவரை விசாரித்ததில் அவரை அவரின்

கணவர் மற்றும் மாமனார், மாமியார் அடித்ததாக சொன்னார். அவரை பரிசோதித்ததில் அவருக்கு முகம் வீங்கியிருந்தது, கை கால்களிலும் வீக்க காயம் காணப்பட்டது. அவருக்கு ஏற்பட்டிருந்த காயம் சொற்ப காயம் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய காய சான்று அ.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( **இதை குறியீடு செய்ய எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆட்சேபனை செய்கிறார். ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.** ) இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

நான் வழங்கிய அ.த.சா.ஆ 3 அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட ஆவணம் அல்ல என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் பதிவு செய்த விபத்து பதிவேட்டின் அடிப்படையில் அ.த.சா.ஆ 3 வழங்கப்படவில்லை என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட பெண் அ.சா. 1 எங்கள் மருத்துவமனைக்கு இரவு 11.00 மணிக்கு வந்தார். அ.த.சா.ஆ 3 ல் தலைப்பில் 31.12.2011 என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.த.சா.ஆ 3 ல் கீழ்பகுதியில் தேதி 31.12.2010 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். போலீசார் கேட்டு கொண்டதன் பேரில் பொய்யான தகவல்களை சொல்லி ஆவணம் தயார் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ 3 சட்ட படி ஏற்புடையது அல்ல என்றாலும் , பொய்யானது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG020015822022-orderno-8.pdf

www.ecourtsindia.com

www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG020015822022-orderno-8.pdf